பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

20 07 2026 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

2. ஆக்கப்பூர்வமான விவாதங்களுக்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

3. முந்தைய அரசுகள் செயல்படுத்திய நலத்திட்டங்கள் ஒருபோதும் நிறுத்தப்படாது என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

4. அரசு மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு கூடுதல் பணியிடங்கள் உருவாக்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் கூறியுள்ளார்.

5. உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்பெயின் சாம்பியன் பட்டம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

இந்தக் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 13ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா உள்ளிட்ட பல முக்கிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்படலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இந்தக் கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

முன்னதாக நேற்று மக்களவை அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் பேசிய மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, இந்தக் கூட்டத்தொடரில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறினார்.

மக்கள் சார்ந்த பிரச்சினைகளை விரிவான மற்றும் பயனுள்ள முறையில் விவாதிக்க அனைத்துக் கட்சிகளும் முன்வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தொடரில் விவாதிக்க வேண்டிய விஷயங்கள், அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து இறுதி செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

காவிரியின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடகா தடுப்பணை கட்ட முயற்சிப்பது குறித்து நாடாளுமன்றத்தில் பிரச்சினை எழுப்பப்படும் என்று திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் திரு. டிஆர். பாலு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுகுறித்து திமுக சார்பில் ஒத்திவைப்பு தீர்மானம் முறைப்படி வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு வந்த பின்னரும், தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட ஒவ்வொரு முறையும் கர்நாடக அரசின் அனுமதியை எதிர்பார்க்க வேண்டிய நிலை நீடிப்பதாக அவர் தெரிவித்தார்.

காவிரி மேலாண்மை குழு முடிவெடுத்தாலும் கர்நாடகம், தமிழகத்திற்கான தண்ணீரை உரிய அளவில் திறந்துவிடுவதில்லை என்றும் திரு. டி.ஆர். பாலு குறை கூறினார்.

<<<<>>>>

முந்தைய அரசுகள் செயல்படுத்திய நலத்திட்டங்கள் ஒருபோதும் நிறுத்தப்படாது என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் கீழடியில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி அருங்காட்சியகத்தை நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், எந்தவொரு பள்ளியையும் மூடும் எண்ணம் அரசுக்கு கிடையாது என்றும் அவர் கூறினார்.

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் மற்றும் அறிவியல் சான்றுகளை முறையாக தொகுத்து மத்திய தொல்லியல் துறையுடன் இணைந்து உலகளவில் கீழடியின் பெருமையை பறைசாற்ற அரசு தொடர்ந்து பாடுபடும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இஸ்லாமியர்களுக்கு கூடுதல் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று தமிழக அரசிடம் வலியுறுத்தியுள்ளதாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கூறியுள்ளது.

திருவாரூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியை சேர்ந்த அமைச்சர் திரு. ஷாஜஹான், இதுகுறித்து முதலமைச்சரிடம் தமது கட்சியின் சார்பில் மனு அளிக்கப்பட்டதாக கூறினார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பின்னர் இதுகுறித்து உரிய முடிவெடுக்கப்படும் என்று முதலமைச்சர் உறுதியளித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

காவிரி நதிநீர்ப் பங்கீடு விவகாரத்தில் மத்திய அரசு தலையிட்டு கர்நாடக அரசிடமிருந்து தமிழகத்திற்கு தேவையான தண்ணீரை பெற்றுத்தர வேண்டும் என்றும் திரு. ஷாஜஹான் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் தற்போது அமைந்துள்ள கூட்டணி ஆட்சியை மக்கள் விரும்புவதாக தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் அருகே அய்யூர் அகரம் கிராமத்தில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிய அரசு பொறுப்பேற்று இரண்டு மாதங்களே ஆவதால் சட்டம்-ஒழுங்கை முழுமையாக சீரமைக்க கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று கூறினார்.

<<<<>>>>

அரசு மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு கூடுதல் பணியிடங்கள் உருவாக்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

*ஈரோட்டில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுகுறித்த அறிவிப்பு வரும் பட்ஜெட்டில் இடம்பெறும் என்று கூறினார்.*

*(Voice Byte – Arunraj – 35 Sec)*

<<<<>>>>

*தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியிலும் இன்று இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் லேசான மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் அந்த மையம் கூறியுள்ளது.*

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

*ஜோர்டான் மீது கடந்த 17ஆம் தேதி ஈரான் நடத்திய தாக்குதலில் அமெரிக்க ராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்ததை அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புக்கொண்டுள்ளது.*

-------------

*ஈரானின் தெற்மேற்குப் பகுதியில் Khuzestan மாகாணத்தில் கட்டப்பட்டு வரும் அணுமின் நிலையத்தின் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் குறித்து சர்வதேச அணுசக்தி முகமை அறிக்கை கேட்டுள்ளது.*

-------------

*உத்தரப்பிரதேசத்தில் பெய்து வரும் பலத்த மழையைத் தொடர்ந்து நேற்றிரவு ஒரு வீடு இடிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்தனர்.*

-------------

*ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்தில் "ஒரு மாவட்டம் - மூன்று தயாரிப்பு பொருட்கள்" என்ற திட்டம் உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்கப்படுத்தும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சுக்விந்தர் சிங் சுகு தெரிவித்துள்ளார்.*

-------------

*திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையில் நடைபெற்ற கோடைவிழாவில் சிறப்பாக அரங்கு அமைத்ததற்காக ஊரக வளர்ச்சித் துறைக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது.*

-------------

*பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி கோவிலில் வருடாந்திர பராமரிப்பு பணி காரணமாக ரோப் கார் சேவை இன்று முதல் 45 நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.*

-------------

*மயிலாடுதுறையில் காவல்துறையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது ஒரு வியாபாரியிடமிருந்து 750 கிலோ போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.*

-------------

*நீர்வரத்து இல்லாததால் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் உள்ள ஆகாயகங்கை நீர்வீழ்ச்சி தற்காலிகமாக மூடப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது.*

--------------

*சென்னை ஆர்.கே. நகர் பகுதியில் வெளிமாநில லாட்டரி சீட்டுகளை விற்றதற்காக 3 பேர் கைது செய்யப்பட்டதாக மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.*

--------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்பெயின் சாம்பியன் பட்டம் வென்றது.*

*நியூஜெர்சியில் நள்ளிரவு நடைபெற்ற பரபரப்பான இறுதிப்போட்டியில் ஸ்பெயின் 1-0 என்ற கோல் கணக்கில் அர்ஜென்டினாவை வென்றது.*

*இரு அணியினரும் சமபலத்துடன் விளையாடியதால் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் கோல் விழவில்லை.*

*வெற்றி தோல்வியை தீர்மானிக்க கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டபோது 106வது நிமிடத்தில் Ferran Torres கோல் அடித்து ஸ்பெயினின் வெற்றிக்கு வழிவகுத்தார்.*

*கூடுதல் நேரத்தில் அர்ஜென்டினா 10 வீரர்களுடன் விளையாடியது. 93வது நிமிடத்தில் அந்த அணியின் Fernandas மைதானத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.*

*அர்ஜென்டினா அணியின் கோல் கீப்பர் Emiliano Martinez ஸ்பெயின் அணியின் கோல் முயற்சிகளை பலமுறை சாதுர்யமாக தடுத்து நிறுத்தியபோதும், கூடுதல் நேரத்தில் கோல் கம்பத்திற்கு அருகே கிடைத்த வாய்ப்பை ஸ்பெயின் வீரர் அற்புதமாக கோலாக்கினார்.*

*நான்காவது முறையாக கோப்பையை வென்று அந்தப் பெருமையுடன் உலகக் கோப்பை கால்பந்து போட்டியிலிருந்து விடைபெறலாம் என்ற அர்ஜென்டினாவின் முன்னணி வீரர் லியோனல் மெஸ்ஸியின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.*

*ஸ்பெயின் சாம்பியன் பட்டத்தை வெல்வது இது இரண்டாவது முறையாகும்.*

*ஏற்கனவே 2010ஆம் ஆண்டு அந்த அணி முதல் முறையாக கோப்பையை வென்றது.*

*கோப்பையை வென்றுள்ள ஸ்பெயின் அணியினருக்கு உலகம் முழுவதும் பாராட்டுகள் குவிந்தவண்ணம் உள்ளன.*

*ஸ்பெயின் வெற்றி பெற்றவுடன் மைதானத்தில் திரண்டிருந்த ரசிகர்கள் உற்சாகமாக ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.*

*ஸ்பெயின் நாட்டிலும் வெற்றிக் கொண்டாட்டங்கள் நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.*

--------------

*இந்தியாவிற்கு எதிரான 3வது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 27 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*

*லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 387 ரன் எடுத்தது.*

*388 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்தியா, 7 விக்கெட் இழப்புக்கு 360 ரன் மட்டுமே எடுத்தது.*

*துவக்க ஆட்டக்காரர் ரோஹித் சர்மா 138 ரன்னும், சுப்மன் கில் 77 ரன்னும், விராட் கோலி 74 ரன் எடுத்தபோதும் மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்ததால் இந்தியா வெற்றி பெற முடியவில்லை.*

*<<<<The End>>>>*